Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

22.05.2020 வெள்ளிக்கிழமை

புதினம் தெரியுமோ?

2 நாளைக்கு முன்னம் பேஸ்புக் கிலதிநர் பரபரப்பு. முன்னாள் போரா ளிக்குழுவும், தற்போது கூட்டமைப் பின் பங்காளிக்கட்சியுமான புளொட் தலைவர் சித்தார்த்தனின் பேஸ் புக்கில் வந்திருந்த பதிவே இந்தப் பரபரப்புக்கு காரணம்.
குறித்த தினத்தில்( 1989 மே 20) தங்களது 42 உறுப்பினர்களைப் புலிகள், இலங்கை அரசோடு சேர்ந்து முள்ளிக்குளம் முகா 2A



## எரிவாயு விலை அதிகரிக்காது

கொழும்பு,மே 22
சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்கப்படாது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது. எந்தவொரு சமையல் எரிவாயு உற்பத்தி நிறுவனமும் எரிவாயுவின் விலையை அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இதுவரை முன்வைக்கவில்லை என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (க)

## கேப்பாபிலவு தனிமைப்படுத்தல் நிலையம் முடக்கத்திலேயே

மக்கள் அஞ்சத்தேவையில்லை என்கிறார் பணிப்பாளர் எஸ்.சுகந்தன்

முல்லைத்தீவு, மே 22
முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப்படைத்தளம் வெளித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு 2

## 24, 25 நாடு முழுவதும் மீண்டும் ஊரடங்கு!

யாழ்ப்பாணம், மே 22
நாடு முழுவதும் நாளை இரவு 8 மணிக்கு நடைமுறைக்கு வரும் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கி ழமை காலை 5 மணிக்கே நீக்கப்படும். ஞாயிறு மற் றும் திங்கட்கிழமை ஊரடங்கு முழுமையாக நடைமுறைப்ப டுத்தும். இவ்வாறு ஜனாதி பதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இத தொடர்பில் அனுப்பி 2

# நாடாளுமன்றத் தேர்தலை தற்போது நடத்தமுடியும்

- சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளதாக நீதிமன்றில் தெரிவிப்பு
- மனுக்களை தள்ளுபடி செய்யவும் சட்டமா அதிபர்
- விசாரணைகள் செவ்வாய் வரை ஒத்திவைப்பு

2



## கொரோனா 1055

கொழும்பு, மே 22
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் மேலும் 07 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி பாதிக்கப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 1,055 ஆக அதிகரித் துள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள் ளது.
புதிய தொற்றாளர்க ளாக 27 பேர் நேற்று அடையாளம் காணப் பட்டுள்ளனர். அவர்க ளில் 15 பேர் டுபாயிலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத் தப்பட்டிருந்த வர்கள் எனவும், 2A

# ஐ.நா. தீர்மானத்தை புறம்தள்ளியே இராணுவத்தினருக்கு பதவியுயர்வுகள்

## ஆதாரங்களுடன் எடுத்தியம்புகிறார் ஜஸ்மின் சூக்கா

கொழும்பு, மே 22
இலங்கையில் போர் முடிவடைந்து 11 ஆண்டு நிறைவில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு வேண்டுமென்றே மேஜர் ஜெனரல் பதவியுயர்வு வழங்கியுள்ளார். பாதுகாப்புத்துறைச் சீர்திருத்தத்துக்கான ஐ.நாவின் தீர்மானம் 30/1 இன் கீழ் இலங்கையின் உறுதிப்பாடுகளுக்கு இணங்க உத் தியோகபூர்வமான பதவிகள் வழங்கப்பட முன்னர் இந்த அதிகாரிகள் வடிகட்டல் மற்றும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருக்கவேண்டும். 2



## முகமாலையில் எலும்புக்கூடுகள்

கிளிநொச்சி,மே 22
கிளிநொச்சி முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு இடம் பெற்றுவரும் பகுதியில் எலும்புக் கூடுகள் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளன. குறித்த பகுதியில் எலும்புகூடு கள் காணப்படுவது தொடர்பில் பொலிஸா 2

## முல்லைத்தீவில் கடற்படையினர் 6 பேருக்கு கொரோனா தொற்று

முல்லைத்தீவு, மே 22
முல்லைத்தீவு கேப்பாப்பி லவு விமானப்படைத் தளத் தில் தனிமைப்படுத்தப்பட்டி ருந்த கடற்படையினர் 6பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பது பரிசோத னைகளின் மூலம் உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளதாக பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:




தனிமைப்படுத்தலுக்காக வெலிசறையிலிருந்து கேப் பாப்பிலவு விமானப் படைத் தளத்துக்கு 399 கடற்ப டையினர் கொண்டுவ ரப்பட்டனர். அவர்க 2

## யாழில் கடும் காற்று: 29 குடும்பங்கள் பாதிப்பு

மீனவர்கள் கடலுக்கு செல்லத் தடை

யாழ்ப்பாணம், மே 22
யாழ்ப்பாண மாவட்டத்தில் வீசிய கடுங்காற் றின் தாக்கத்தால் 29 குடும்பத்தைச் சேர்ந்த 99 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு இந்தக் காலநிலை தொடரும் என எதிர்பார்க்கப்படுவதால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்க 2A

## சீரற்ற காலநிலையால் 20,000 பேர் பாதிப்பு

கொழும்பு,மே 22
இரத்தினபுரி உட்பட நாட் டின் 13 மாவட்டங்களில் பெய்துவரும் அடைமழை யால் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு மற்றும் கடும் காற்றால் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட் டுள்ளனர். மூவர் உயிரிழந்துள் ளதுடன், நால்வர் காயமடைந் துள்ளனர். அத்துடன், 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவும், 21 வீடுகள் முழுமையாக வும் சேதமடைந்துள் ளன என்று அனர்த்த 2

# ஐ.நா. தீர்மானத்தை புறம்தள்ளியே...

'இந்த தனிநபர்களின் தெரிவானது அரசியலை அடிப்படையாகக் கொண்டதொன்று. இது இலங்கையர்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் பேச்சளவிலான நல்லிணக்கம் என்பது கூட நிகழ்ச்சி நிரலில் இல்லை என்ற செய்தியை மீண்டும் அனுப்புகின்றது. இது பாதிக்கப்பட்டவர்களை இழிவுபடுத்தும் இன்னுமொரு செயலாகவும் தண்டனையிலிருந்து துணிவாக பாதுகாப்பு வழங்கும் செயலாகவும் உள்ளது' என்று சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒரு இராஜதந்திரியாக இருந்தவேளையில் பொதுக்கட்டளைச் சட்டத்தை மீறியதாக நீதிமன்றத்துக்கு சமூகமளிக்காதபோதும் பிரிட்டன் நீதிமன்றத்தால் குற்றவாளியாக இனங்காணப்பட்ட பிரியங்க பெர்னாண்டோவின் பதவியுயர்வானது மிகவும் முக்கியமானதாகும்.

2018 ஆம் ஆண்டு பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு வெளியே தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கழுத்தை அறுக்கும் சைகையைக் காட்டி அச்சுறுத்தல் மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்பட்டார்.

இவர் குற்றச் செயல்கள் புரிந்தபோதும் இலங்கைக்கு திரும்பிச் சென்றதில் இருந்து இவருக்கு மீண்டும் மீண்டும் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டதுடன் ஒரு மாவீரனாகவும் அழைக்கப்பட்டார்.

'நீங்கள் உலகம் முழுவதும் சென்று நாடுகடந்து வாழும் தமிழர்களை இழிவுபடுத்தி அச்சுறுத்தினால் உங்களுக்கு பரிசு வழங்கப்படும் என்பதே இராணுவ அதிகாரிகள் மற்றும் இராஜதந்திரிகளுக்கான செய்தியாகும்' என்று சூக்கா தெரிவித்தார். இது பிரிட்டனின் நீதிமுறைமையை அவமதிக்கும் ஒரு மோசமான நடவடிக்கையுமாகும்'

விசேட அதிரடிப்படைகளின் முன்னாள் தளபதியான கஜேந்திர பராக்கிரம ரணசிங்கவின் பதவியுயர்வானது பொறுப்புக்கூறலுக்கு விழுந்த இன்னுமொரு பெரிய அடியாகும். மே 2009 இல் இசைப்பிரியா என்று அறியப்பட்ட தமிழ் தொலைக்காட்சியின் பெண் தயாரிப்பாளர் இராணுவத்தினரிடம் சரணடைவது பற்றிய வீடியோக்களில் ஒன்றில் இவர் அடையாளங்காணப்பட்டுள்ளார். இந்தப் பெண் தயாரிப்பாளர் சிறிது நேரத்தின் பின்னர் இராணுவத்தின் பிடியில் இருந்த வேளையில் கொலைசெய்யப்பட்டதாக ஐ.நா. விசாரணை ஒன்று கண்டுபிடித்தது. இசைப்பிரியாவுடன் தெளிவாக வீடியோவில் காணப்பட்ட போதும் என்ன நடந்தது என்பது பற்றி ரணசிங்க இன்று வரை விசாரிக்கப்படவில்லை. இசைப்பிரியாவின் அரைநிர்வாண உடல் வெற்றிப் புகைப்படங்களில் காணப்பட்டது.

'தமது மகளுடைய கொலைக்கான முக்கிய சாட்சி ஒருவர் மேஜர் ஜெனரலாக பதவியுயர்வு வழங்கப்படுவதைப் பார்க்கும் போது நாடுகடந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள இசைப்பிரியாவின் உயிர் தப்பியுள்ள குடும்பத்தினருக்கு எப்படி இருக்கும் என்று யாராவது கேட்க வேண்டும்' என சூக்கா தெரிவித்தார்.

சன்னா டி வீரசூரியா யாழ்ப்பாணத்தில் 512 ஆவது படையணியின் தளபதியாக இருந்தார். அந்தக் காலப்பகுதியில் அந்தப் படையணியும் வேறு படையணிகளும் தமிழ் சந்தேகநபர்களை தடுத்து வைத்துச் சித்திரவதை செய்ததில் தொடர்புபட்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. இந்த தமிழ்ச் சந்தேகநபர்களில் சிலர் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தால் பேட்டி காணப்பட்டார்கள்.

அதிகரித்த இராணுவ மயமாக்கல் மற்றும் ஜனாதிபதிக்கு நெருக்கமான ஓய்வுபெற்ற மற்றும் சேவையாற்றும் அதிகாரிகளுக்கு சிவில் பதவிகள் வழங்கப்பட்டு வரும் பின்னணியில் இந்த பதவியுயர்வுகள் இடம்பெற்றுள்ளன. கொவிட் 19 இனால் பாதுகாப்பு பற்றிய கரிசனைகள் இருந்த போதும் ஆயுதப்படையினரை உள்ளடக்கி இந்த வாரம் கொழும்பில் ஒரு போர் ஞாபகார்த்த நிகழ்வை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் இவ்வாறான ஞாபகார்த்த நிகழ்வு வடக்கு கிழக்கில் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு பாதுகாப்பு படையினரால் வைரஸ் ஒரு சாட்டாகப் பயன்படுத்தப்பட்டது.

பொதுச் சமூக மட்டத்தில் இராணுவ செல்வாக்கு சாதாரணமாக்கப்படுவதையே நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்று குறிப்பிட்ட சூக்கா தண்டணையிலிருந்து பாதுகாப்பு மேலும் வலுப்பெறும் வகையில் முறைப்படியற்ற வலையமைப்புக்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவின் கீழ் உத்தியோகபூர்வமானவையாக மாற்றப்பட்டுவருகின்றன எனவும் தெரிவித்தார். (ஒ,5)

## கேப்பாபிலவு தனிமைப்படுத்தல்...

தனிமைப்படுத்தப்பட்ட இடம் போன்றே இயங்குகின்றது. இதனால் பொதுமக்கள் அஞ்சத்தேவையில்லை என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் எஸ். சுகந்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கேப்பாபிலவு விமானப்படைத்தளம் தனிமைப்படுத்தல் நிலையமாகச் செயற்படுகின்றது. இங்கு கடற்படையினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த முகாமிலிருந்து எவரும் வெளிச்செல்ல முடியாது. அங்கு பணியாற்றுகின்றவர்கள் கூட, அந்த முகாமினுள் பிறிதொரு இடத்திலேயே தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் கூட முகாமை விட்டு வெளியேற முடியாது. எனவே, முகாமிலிருந்து எவரும் சமூகத்துக்குள் வரமுடியாது. மக்கள் அச்சமடையத்தேவையில்லை- என்றார். (ஒ,5)

## சீரற்ற காலநிலையால்...

முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. வெள்ளம் மற்றும் மண்சரிவால் இரத்தினபுரி மாவட்டத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரத்து 492 வீடுகள் பகுதியளவும், 20 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. இடம்பெயர்ந்தவர்கள் 7 பாதுகாப்பான நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் உறவினர்கள் மற்றும் அயலவர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் 225 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். 281 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

கடும் காற்றால் யாழ்ப்பாணத்தில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 29 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்விரு மாவட்டங்களிலும் மொத்தமாக 9 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன.

நாட்டில் தற்போது பெய்யும் மழை அடுத்து சில நாள்களுக்கும் தொடரக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (க44)

## 24, 25 நாடு முழுவதும்...

வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் ஊரடங்கு மறுஅறிவித்தல் வரை தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும். நாளை மறுதினம் ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய இருதினங்களும் நாடு முழுவதிலும் ஊரடங்கு முழுமையாக நடைமுறையிலிருக்கும்.

கொழும்பு மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நாளை சனி இரவு 8 மணி முதல் நடைமுறைப்படுத்தப்படும் ஊடரங்கு எதிர்வரும் செவ்வாய் அதிகாலை 5 மணிக்கு தளர்த்தப்படும். இம்மாவட்டங்களில் ஊரடங்கு தினமும் இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரை மறுஅறிவித்தல் வரை தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் ஊரடங்கு நடைமுறையிலிருந்தபோதும் இயல்பு வாழ்க்கையை வழமைநிலைக்குக் கொண்டு வருவதற்காக ஆரம்பிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் நாளையும் நடைமுறையில் இருக்கும் அதேநேரம் எதிர்வரும் செவ்வாய் முதல் முன்னர் போன்று தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். முன்னர் வெளியிடப்பட்ட அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட ஊரடங்குடன் தொடர்புடைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றங்களும் இல்லை, என்றுள்ளது. (ஒ,5,44)

# நாடாளுமன்றத் தேர்தலை

கொழும்பு, மே 22

நாட்டில் தற்போது காணப்படுகின்ற சூழ்நிலைக்கு மத்தியில் நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை முன்னோக்கிக்கொண்டு செல்ல முடியும் என்று சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க, ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ்; டி சில்வா உயர்நீதிமன்றத்தில் இன்று அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற ஒத்திவைப்புக்கெதிரான மனுக்கள் மீதான விசாரணையின் ஐந்தாம் நாளான இன்று ஜனாதிபதியின் செயலாளர் சார்பில் உயர் நீதிமன்றத்தில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தனது வாதத்தின்போது இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியோர் குணமடையும் வீதம் அதிகரித்துள்ளமை மற்றும் உயிரிழப்பு வீதம் வெகுவாக குறைவடைந்துள்ளமை ஆகியன இலங்கையில் கொரோனா வைரஸ் ஒழிப்பை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளதை சுட்டிக்காட்டுவதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம், கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக ரொமேஷ் டி சில்வா மன்றில் குறிப்பிட்டுள்ளார்.

உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளுக்கு அமைய அரசு தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும், சுகாதார நடைமுறைகளை எதிர்வரும் காலங்களிலும் பின்பற்றுதல் அவசியம் எனவும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், வைரஸ் ஒழிப்பிற்கான மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படாத நிலையில், வைரஸ் தொற்று எச்சரிக்கை தொடர்ந்தும் காணப்படுவதாக சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க சுட்டிக்காட்டியுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ்; டி சில்வா உயர்நீதிமன்றத்தில் இன்று தெரிவித்துள்ளார்.

**தள்ளுபடி செய்யவும்**

நாடாளுமன்ற ஒத்திவைப்புக்கெதிரான மனுக்களை பரிசீலனைக்கு எடுக்காமலேயே தள்ளுபடி செய்யுமாறு சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா இன்று உயர்நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

**ஒத்திவைப்பு**

நாடாளுமன்ற ஒத்திவைப்புக்கெதிரான மனுக்களை ஆராய்வதை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை வரை ஒத்திவைத்தது உயர்நீதிமன்றம். (ஒ,5)

## முல்லைத்தீவில் கடற்படையினர்....

ளில் 99 பேருக்கு கடந்த 19ஆம் திகதி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவர்களில் 40 பேரின் பரிசோதனை முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டன. இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் வெலிகந்த மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

எஞ்சிய 59 பேரின் பரிசோதனை முடிவுகள் இன்று காலை அறிவிக்கப்பட்டன. கடற்படையினர் 6 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களும் வெலிகந்த மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 40 பேருக்கு நாளைய தினம் சோதனை முன்னெடுக்கப்படவுள்ளது, என்றார். (ஒ,5)

## முகமாலையில்...

ருக்கு கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் நிறுவனப் பணியாளர்களால் தகவல் வழங்கப்பட்டது. குறித்த பகுதியை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் பார்வையிட்டதன் பின்னர் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்ததுடன், இரு தரப்பினருக்கும் இடையில் நீண்ட காலம் போர் நடைபெற்ற இடம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)



# கொரோனா 1055...

11 பேர் கடற்படையினர் எனவும், மற்றவர் குவைத்திலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.
தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 16 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 620 ஆக உயர்ந்துள்ளது.
இதுவரை தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் 09 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 426 நோயாளிகள் 08 மருத்துவமனைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.
கொழும்பு தேசிய தொற்று நோய் தடுப்பு மருத்துவமனையில் 80 பேரும், பொலநறுவை வெலிகந்தை ஆதார மருத்துவமனையில் 36 பேரும், கொழும்பு கிழக்கு முல்லேரியா ஆதார மருத்துவமனையில் 50 பேரும், சிலாபம் இரணவில மருத்துவமனையில் 19 பேரும், மட்டக்களப்பு காத்தான்குடி ஆதார மருத்துவமனையில் 28 பேரும், வெலிசறையிலுள்ள கடற்படை பொது மருத்துவமனையில் 128 பேரும், ஹோமாகம ஆதார மருத்துவமனையில் 37 பேரும், மினுவான்கொடை ஆதார மருத்துவமனையில் 48 பேரும் சிகிச்சைபெற்று வருகின்றனர்.
இதனிடையே மேலும் 110 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 25 வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ, 22)

# யாழில் கடும் காற்று....

வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜா தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது தற்போது நிலவிவருகின்ற அம்பான் புயலின் தாக்கம் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அதனுடைய தாக்கம் உணரப்பட்டுள்ளது. முக்கியமாக யாழ்ப்பாணத்தில் காற்றின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. கடும் காற்றின் தாக்கத்தால் இன்று காலைவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் 29 குடும்பத்தைச் சேர்ந்த 99 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
22 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. கைதடி பகுதியில் பாடசாலை ஒன்றும் சேதமடைந்துள்ளது. மயிலிட்டி பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்து ஒரு பெண் காயமடைந்தநிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் அவர் மீண்டும் கரை சேர்ந்துள்ளார். சிறு மற்றும் நடுத்தர முயற்சியாளர்கள் 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கடற்கரையை அண்டிய பகுதிகளில் காற்றின் வேகம்கூடுதலாகக் காணப்படுவதனால் குறிப்பாக கரையோரப் பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும். இந்தக் காலநிலையானது எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டும். மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்க செல்வதை தவிர்க்க வேண்டும்-என்றார். (ப-111)

# திட்டமிட்டு சேறுபூசும் நடவழிக்கையில் அரசு!

## ஹரின் பெர்னாண்டோ குற்றச்சாட்டு

கொழும்பு, மே 22

அரசாங்கம் தற்போதுள்ள நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாப்பதைகவனத்தில் கொள்ளாது, எதிர்த் தரப்பு அரசியல்வாதிகள் மீது திட்டமிட்ட சேறுபூசல்களை முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காக வாக்களித்த மக்கள் அரசாங்கத்திடம் இதனை எதிர்பார்க்கவில்லை. தற்போதுள்ள நெருக்கடியில் எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் மீது சேறுபூசல்களை மேற்கொள்வதை விட நாட்டை முன்னேற்றுவது தொடர்பிலே அனைவரும் அவதானம் செலுத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கியதை அடுத்து நாங்கள் தெரிவித்து வந்த எதுவுமே பிழைக்கவில்லை. கொரோனா வைரஸ் தொடர்பில் எச்சரிக்கை விடுத்து வந்த போதிலும், அரசாங்கம் தேர்தலை நடத்தும் எண்ணத்தில் நாட்டை திறந்து வைத்திருந்தமையால் இன்று



வைரஸ் பரவலால் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அரசாங்கம் வைரஸ் பரவலிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாத்துக்கொள்வதை விட எதிர்க்கட்சி உறுப்பினர்களை அடக்கி வைப்பதையே மிக முக்கிய செயற்பாடாக்கியுள்ளது.

அரசாங்கம் தங்களுக்குச் சார்பான சில ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஐக்கிய மக்கள் சக்தியின் சிறந்த பேச்சாற்றல் மிக்க உறுப்பினர்களைச் சிறைப்பிடித்து அவர்களை அடைத்து வைத்து விட்டு, தங்களது இஷ்டம்போல் செயற்படுவதற்கு முயற்சிக்கின்றது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட காணொலிகளைக் கொண்டு அரசாங்கத்துக்கு துணை போகும் சில சதிகாரர்கள் ஊடாக அந்த காணொலிகளை மீள் திருத்தம் செய்து, அதில் அவர்கள் அடக்கி வைக்க எண்ணியிருக்கும் எதி பார்த்திருக்கும் எதிர்த் தரப்பு அரசியல்வாதிகளைத் தொடர்பு படுத்தி, எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் மீது திட்டமிட்ட சேறுபூசல்களை முன்னெடுத்து வருகின்ற னர்.

எம்முடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு அதன் உண்மைச் சம்பவம் தொடர்பில் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இந்நிலையில் இந்த விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொள்ள வேண்டும். பொலிஸார் மீது எமக்குப் பெரும் மதிப்பு உள்ளது. அவர்கள் அரசாங்கத்துக்குத் துணைபோகாமல் நியாயமான முறையில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

எதிர்த் தரப்பு அரசியல்வாதிகளின் தனிப்பட்ட வாழ்கை முறையோ, தனிப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலோ பேசித்திரி வதற்கான காலமல்ல இது. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் மீண்டெழச் செய்வதே முக்கியமான செயற்பாடாகும். என்றார். (க)

# புதினம் தெரியுமோ?

மில் படுகொலை செய்தார்கள் என்பதை நேரடியாகவும், ஆனாலும்' தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், மீண்டும் தர்மமே வெல்லும் என்று அந்தப் பதிவை முடித்து, தம்மை அழித்ததாலேயே புலிகள் அழிந்து போனாலும், தாம் இன்னும் நிலைத்திருப்பதான மறைமுகச் செய்தியையும் அந்தப் பதிவு சொல்லியிருந்தது.
ஆனால் பொதுவான பத்திரிகைச் செய்தி நறுக்குகளின் படி சகோதரப் படுகொலைகளில் முன்னணியில் நின்ற சங்கிலி என்ற முக்கியமான புளொட் உறுப்பினர் உள்ளிட்டோர் இருந்த முள்ளிக்குளம் முகாமை புலிகள் தாக்கி அழித்தனர் என்றே அறியக் கிடக்கிறது. அரச படைகளின் துணையோடு இருந்த ஆயுதக் குழுவொன்றையே புலிகள் தாக்கி அழித்திருந்தனர். இந்தியப் படை நிலைகொண்டிருந்த அந்தக் காலப்பகுதியில் இலங்கை மற்றும் இந்தியப்படைகளின் ஆசிர்வாதத்தோடே புளொட், முள்ளிக்குளத்தில் முகாம் அமைத்திருந்தது. அத்தகைய முகாம் ஒன்றையே புலிகள் தாக்கி, அழித்திருந்தார்கள். அதாவது ஆக்கிரமிப்பு படைகளோடு இணைந்து தமிழ்த் தேசியத்துக்கு எதிராகச் செயற்பட்ட கும்பலே கொல்லப்பட்டிருந்தது.
காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு தானே. என்னதான் இனத்துரோக நடவடிக்கையில் ஈடுபட்டு தண்டனை கிடைத்தாலும், தங்க இயக்க உறுப்பினர்களை குறித்த இயக்கம் விட்டுக் கொடுக்காது தானே. என்றாலும், இப்போது தமிழ்த் தேசியத்தை ஏற்றுக் கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து தேர்தல் அரசியலில் இறங்கியுள்ள குறித்த அமைப்பு, புலிகளுக்கு எதிரான கருத்தை 'முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ' முடிந்த இரண்டாம் நாளே பதிவிட்டிருந்தது.
ஆனால் பல தரப்புகளிடமிருந்தும் கண்டனங்கள் எழ, உடனடியாகவே அந்தப் பதிவில் முள்ளிக்குள விவகாரம் நீக்கப்பட்டு, அதன் இறுதிப்பகுதியில் இருந்த 'தர்மத்தின் வாழ்வுத னைச் சூது கவ்வும், மீண்டும் தர்மமே வெல்லும் என்ற வாக்கியங்கள் மட்டுமே எஞ்சியிருந்தது.
இருப்பினும் புலிகளுக்கு எதிராக போடப்பட்ட இந்தப் பதிவை பலரும் 'ஸ்க்ரீன்' சொட் எடுத்து வைத்து இப்போது பேஸ்புக்கில் வைரலாக்கி வருகின்றனர்.
அது வெளிநாட்டில் இருந்து இயக்கப்படும் கணக்கு. எங்களைக் கேட்காமல் போட்டுவிட்டார்கள். உடனடியாக அவர்களுக்கு அறிவித்து அதனை நீக்கிவிட்டோம் என புளொட் தரப்பு சமாளித்தாலும், அது உண்மையில்லை என்பது எல்லோருக்குமே தெரியும். இந்தியாவில் தவறான பதிவுகளைப் போட்டு விட்டு அது நான் போடவில்லை. என் அட்மின் தான் பதிவிட்டார் எனச்சமாளிக்கும் பாரதிய ஜனதாவின் எச்.ராஜாவுக்கும் புளொட்டின் சமாளிப்புக்கும் எந்த வித்தியாசமும் தெரியவில்லை என்பதே உண்மை.

# மைத்திரி போன்று அவமானப்படாதீர்!

## கோத்தாவுக்கு மங்கள அறிவுரை

கொழும்பு, மே 22

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போல் இந்நாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் உயர்நீதிமன்றத்துக்குச் சவால்விட்டு அவமானப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம் என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தை மீளக்கூட்டுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டாலும் தாம் கூட்டப்போவதில்லை என்று நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்திருந்தார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மங்கள சமரவீர மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த 2018 ஆம் ஆண்டு 52 நாள் அரசியல் சதிப்புரட்சியின்போது உயர் நீதிமன்றத்துக்கு சவால் விட்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டிருந்தார். எனினும், நீதிமன்றத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பின் பிரகாரம் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீளக் கூட்டப்பட்டது. இதை இந்நாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் மனதில்கொண்டு செயற்பட வேண்டும். தற்போதைய மனுக்களின் பிரகாரம் நாடாளுமன்றக் கலைப்பு வர்த்தமானி அறிவிப்பு செல்லுபடியற்றது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால்கூட நாடாளுமன்றத்தை சபாநாயகரால் மீளக்கூட்ட முடியும். அதற்குரிய அதிகாரம் தற்போதைய அரசமைப்பில் இருக்கின்றது- என்றார். (ப-22)

# நான்கு ஏக்கர் காடு தீயில் எரிந்து நாசம்

மட்டக்களப்பு, மே 22

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாசிக்குடா பிரதேசத்தில் சுமார் நான்கு ஏக்கர் காடு தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளது என்று கல்குடா பொலிஸார் தெரிவித்தனர். பாசிக்குடா முருகன் ஆலய வீதியிலுள்ள அரச காணியொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கல்குடா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மட்டக்களப்பு மாநகர தீயணைப்பு படையினர், கல்குடா பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் தீ கட்டுபாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

தீ பரவலுக்கான காரணம் தெரியவில்லை எனவும், இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் கல்குடா பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-150)



# குருதிக் கொடை முகாம்

கொடிகாமம், மே 22

சமூக ஆர்வலர்களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் நாளை சனிக்கிழமை கச்சாய் வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ளது. குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் கலந்துகொண்டு குருதித்தானம் செய்யுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ-159)



# மரம் வீழ்ந்ததால் போக்குவரத்து தடை

முல்லைத்தீவு, மே 22

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஏ35 முதன்மை வீதியில் மந்துவில் பகுதியில் வீதி ஓரத்தில் நின்ற பாலைமரம் முறிந்து வீழ்ந்ததால், வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டது.

கடும் காற்றால் வீதியில் நின்ற பாலை மரம் முறிந்து வீதிக்குக் குறுக்கே வீழ்ந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. அதனால் வீதியூடாகப் போக்குவரத்து தடைப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்துக்கு தெரிவித்ததை அடுத்து, புதுக்குடியிருப்புப் பிரதேச சபையினர் மரத்தை அகற்றி, வீதிப் போக்குவரத்தைச் சீர்செய்தனர். (க-19)

# உயிரிழந்த சிப்பாய்க்கு பி.சி.ஆர். பரிசோதனை

அம்பாறை, மே 22

அம்பாறை காஞ்சிரங்குடா இராணுவ முகாமில் கடமையாற்றிய இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்றிரவு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் 42 வயதுடைய ஜயவிக்கிரம எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுவாசப் பிரச்சினை காரணமாக இவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டபோதும், இறந்தவரின் தொண்டையில் இருந்து பெறப்பட்ட மாதிரி சந்தேகத்தின் அடிப்படையில் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று கல்முனை பிராந்தியச் சுகாதாரப் பணிப்பாளர் ஜி.சுகுணன் தெரிவித்தார்.

அறிக்கை கிடைத்தபின்பே உடற் கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ள முடியும் என்பதால் அதுவரை சடலம் பாதுகாப்பான முறையில் பிளாஸ்டிக் பையினுள் இட்டு திருக்கோவில் ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. இறப்பு தொடர்பான ஆரம்பக்கட்ட விசாரணைகளும், பரிசோதனைகளும் இடம்பெற்று வருகின்றன. பி.சி.ஆர் பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றதும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்தார். (க)

# தொழில் தேவைக்காக சைப்ரஸ் செல்ல அனுமதி

மன்னார், மே 22

கொரோனா அச்சுறுத்தலைத் தொடர்ந்து வெளிநாடுகளுக்கான பயணத்தடை நீக்கப்பட்டதன் பின்னர் தொழில் தேவைக்காக சைப்ரஸ் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தால் வெளியிடப்பட்ட சலுகை விதிமுறைகளுக்கு அமைய குறித்த நாட்டுக்குப் பயணிக்க முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது. இதற்கமைய சைப்பிரஸில் தொழில்புரிந்து விடுமுறைக்காக நாட்டுக்குள் வந்தவர்களின் விடுமுறைக் காலம் மார்ச் 15 ஆம் திகதிக்கு பின்னர் நிறைவடையுமாயின் அவர்களால் மீண்டும் அந்த நாட்டுக்கு தொழில்வாய்ப்பிற்காகச் செல்லமுடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.(ப)



# மரம் வீழ்ந்து வீடு சேதம்

வவுனியா, மே 22

கடும் காற்றுக் காரணமாக பெரு மரம் ஒன்று வீட்டின் மேல் சாய்ந்து வீழ்ந்துள்ளது. இந்தச் சம்பவம் வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் நேற்று நடந்துள்ளது.

வீட்டில் சிறுகுழந்தை உட்பட குடும்பத்தினர் வசித்த நிலையில் அவர்களுக்கு எந்தவித பாதிப்புக்களும் இடம்பெறவில்லை. இந்த இடரால் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வவுனியா நகரசபைக்கு தெரியப்படுத்திய நிலையில் உடனடியாக வந்த நகரசபையின் உபதவிசாளர் நகரசபை இயந்திரங்களின் உதவியுடன் வீழ்ந்த மரத்தை அகற்றினர். (ஐ-110)

# 2 ஆம் கட்டக் கொடுப்பனவு 50 வீதம் நிறைவு

முல்லைத்தீவு, மே 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆம் கட்டக் கொடுப்பனவு 50 வீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று சமுர்த்தித் திணைக்களத்தின் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

2 ஆம் கட்டக் கொடுப்பனவு வழங்கல் நடவடிக்கைகள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நேற்றுவரை 50 வீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.(ஐ-39)

# சுழன்றடிக்கும் காற்றால் பல கிராமங்கள் இருளில்

கிளிநொச்சி, மே 22



கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் நேற்று வீசிய பலத்த காற்றால் பாலை மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து பாதிக்கப் பட்டதுடன் பல கிராமங்களுக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டது. இரவு 11.30 மணியளவில் மின்சார இணைப்புக்கள் சீர் செய்யப்பட்டு நிலைமை வழமைக்குத் திரும்பி யது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பகல் 1.30 மணியளவில் வீசிய பலத்த காற்றாலேயே இந்த மரம் முறிந்து வீழ்ந்துள் ளது. இதனால் மின்சார சபை மற்றும் ரெலி கொம் நிறுவனத்துக்கும் நட்டம் ஏற்பட்டுள் ளது. மரம் முறிந்து வீழ்ந்ததில் மின் கம்பிகள் அறுந்துள்ளன, கம்பங்களும் முறிந்துள்ளன. இதன் காரணமாக வட்டக்கச்சி, இராமநாதபு ரம், திருவையாறு, பன்னங்கண்டி உள்ளிட்ட பல கிராமங்களுக்கான மின்சாரம் துண்டிக்கப் பட்டது.

அந்த மரத்தை அகற்றுவதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு, இரவு 11.30 மணிய ளவில் மின் இணைப்புக்கள் சீர்செய்யப் பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. கிளி நொச்சி மாவட்டத்தில் நேற்றுக் காலை முதல் வீசிவரும் பலத்த காற்றுக் காரணமாக பூநகரி குடமுருட்டிப் பகுதியில் உள்ள மின்கம்பங்கள் முறிந்து வீழ்ந்தமையால் பூநகரிப் பிரதேசத்தில் உள்ள பல கிராமங்களுக்கு மின்சாரம் தடைப் பட்டது. ஆறு மின்கம்பங் கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட் டது. (ஐ-35)

## விடுதலைப் புலிகளை உருவாக்க முயற்சியாம்

### மூதூரில் ஒருவர் கைது

கொழும்பு, மே 22

விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயன்றார் என்ற குற்றச்சாட்டில், திருகோண மலை, மூதூரில் ஒருவர் கைதுசெய்யப்பட் டுள்ளார் என்று சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மூதூர், சேருநுவரப் பகுதிகளில் தனியார் நிதி நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் உள்ளிட்ட சில இளைஞர்களின் முகநூல் கணக்குகளை சிங்கள ஊடகங்கள் வெளியிட்டிருந்தன.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் புகைப்படம், தமிழீழ படம் மற்றும் புலிகளின் படங்கள் உள்ளிட்ட வற்றை அவர்கள் முகநூலில் பகிர்ந்திருந்த னர். அதற்கான ஸ்கிரீன் சொட்களை அவை வெளியிட்டிருந்தன.

அத்துடன், அவர்கள் மீது புலனாய்வுப்பிரிவு நடவடிக்கையெடுக்க வேண்டுமென்றும் வலி யுறுத்தின. இதையடுத்து, சிங்கள சமூக ஊட கங்களில் இது பரவலாகப் பகிரப்பட்டது.

இந்த நிலையில், அதில் தொடர்புடைய இளைஞன் ஒருவர் குற்றவியல் புலனாய்வுத் துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலும் ஐவர் தொடர்பாக விசாரணை நடந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## மாணவர்களுக்கு போசாக்கு உணவு

கொழும்பு, மே 22

பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக் காக ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் மாண வர்களுக்கு போசாக்கு உணவுப் பொதிகளை வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

கல்வியமைச்சின் செயலாளர் என்.எச்.எம் சித்ரானந்த இதனை தெரிவித்துள்ளார்.

மாணவர் ஒருவருக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த போசாக்கு உணவுப் பொதியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள் ளது. வலயக் கல்விப் பணிமனைகளுடன் இணைந்து அதனை வழங்குவதற்கான நட வடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கல்வி யமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ப)

## தலைபிறையை தீர்மானிக்கும் மாநாடு

கொழும்பு, மே 22

புனித ஷவ்வால் மாத தலைபிறையைத் தீர்மா னிக்கும் மாநாடு நாளை சனிக்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்ய துல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல் கள் திணைக்கள உறுப்பினர்கள், கொழும்பு மேமன் சங்க உறுப்பினர்கள் மற்றும் உலமாக் கள் கலந்து கொள்வர். நாட்டில் எந்தப் பாகத் திலாவது தலைபிறை தென்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் 0112 432110, 0112451245 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் சகல முஸ்லிம்களையும் கேட்டுள்ளது. (க)

## இரண்டாம் கட்டமாகவும் 5000 ரூபா கொடுப்பனவு!

### சமுர்த்தி உதவிப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், மே 22



யாழ். மாவட்டத்தில் முதலாம் கட்ட 5000 ரூபா உதவிப் பணத்தைப் பெற்ற அனைவருக் கும் இரண்டாம் கட்டமாகவும் அந்தப் பண உதவி வழங்கப்ப டும். பொதுமக்கள் இது தொடர் பில் அச்சமடையத் தேவை யில்லை.

இவ்வாறு யாழ் மாவட்ட சமுத்தி உதவிப் பணிப் பாளர் க.மகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதா வது:

கொரோனா பாதிப்பின் காரணமாக அரசால் வழங்கப்படும் இடர்நிதியை யாழ்ப்பாண மாவட் டத்தில் வதியும் ஏப்ரல் மாத உதவித் தொகையைப் பெற்ற ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 113 குடும்பங்க ளுக்கு இரண்டாம் கட்டமாக 5 ஆயிரம் ரூபா உதவித்தொகை கட்டாயமாக வழங்கப்படும்.

இந்த உதவித்தொகை 76 ஆயிரத்து 32 சமுர்த்தி பயனாளிகள், 11 ஆயிரம் சமுர்த்தி உதவி பெற காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்கள், 39 ஆயிரத்து 473 தொழிலற்றவர்கள் மற்றும் 8 ஆயிரத்து 608 மேன்முறையீடுகள் மூலம் இணைக் கப்பட்டோர் உள்ள குடும்பங்களுக்கு வழங்கப் பட்டது. முதற்கட்டமாக உதவித்தொகை பெற்ற அனைவருக்கும் இரண்டாம் கட்ட உதவித் தொகை கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் வழங் கப்பட்டு வருகின்றது. இரண்டாம் கட்ட 5000 ரூபா கொடுப்பனவு கட்டாயம் வழங்கப்ப டும். எனவே பொதுமக்கள் அச்சமடையத் தேவை யில்லை அரசால் வழங்கப்படும் நிதி வழங்கலில் உள்ள தாமதத்தின் காரணமாக, மக்களுக்கு உதவித் தொகையை வழங்குவதில் தாமதம் ஏற்படுகின்றது. எனினும் அது அனைவருக்கும் வழங்கப்படும்.

தங்களுடைய பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர்க ளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி பொது மக்கள் இரண்டாம் கட்டக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும்- என்றார். (க-111)

## ஹெரோய்னுடன் இருவர் கைது

கொடிகாமம், மே 22

ஹெரோய்ன் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

குருநகர் மற்றும் யாழ்ப் பாண நகரப் பகுதிக ளில் வைத்து நேற்று வியாழக்கிழமை இவர் கள் கைதுசெய்யப் பட்டனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலி ஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின் றனர். (ஐ-159)

## அரிசியை தட்டுப்பாடின்றி வழங்கக் கோரிக்கை

கொழும்பு, மே 22

சந்தையில் அரிசிக்கான தட்டுப் பாடு ஏற்படுவதைத் தடுப்பதற் காக தங்களிடமுள்ள நெல் மற்றும் அரிசியைத் தட்டுப்பா டின்றி வழங்குமாறு நுகர்வோர் அதிகார சபை வர்த்தகர்கள் மற்றும் அரிசி மொத்த சேக ரிப்பாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நுகர்வோர் அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப் பட்டுள்ளது. அரிசியைப் பதுக்கி வைக்கும் நிறுவனங்கள் மற்றும் ஆள்கள் தொடர்பில் சுற்றிவளைப்புக்களை முன்னெ டுக்கவுள்ளது என்றும் அந்த அதிகார சபை தெரிவித்துள் ளது.

அண்மையில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியி ருந்தன. நெல் மற்றும் அரி சியை பதுக்கி வைப்பவர்க ளுக்கு எதிராக சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும். பிடி யாணை இன்றி அவ்வாறான வர்களைக் கைதுசெய்ய முடி யும் என்றும் நுகர்வோர் அதி காரசபை தெரிவித்துள்ளது. அவ்வாறானவர்கள் தொடர் பில் நுகர்வோர் அதிகார சபையின் 1977 என்ற அவசர இலகத்துக்கு தொடர்பு கொண்டு முறைப்பாடுசெய்ய முடியும் என்று அந்த அதிகார சபை அறிவித்துள்ளது. (ப)

# அரச நிறுவனங்களை மீளமைக்க வேண்டும்

## சபாநாயகர் கோரிக்கை

கொழும்பு,மே 22

அரசதுறை நிறுவனங்கள், அவற்றின் செயல் திறனையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத் தும் வகையில் தம்மை மீளக் கட்டமைப்பது அவசியமாகும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

இலங்கையின் பெரும்பாலான அரசதுறை நிறுவனங்கள், அவற்றின் செயற்றிறனையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்தும் வகையில் தம்மை மீளக்கட்டமைப்பது அவசியமாகும்.

முறையான நியமனங்கள், சரியான இலக்குகள் மற்றும் அரசியல் தலையீடுகள் தவிர்ப்பு ஆகிய வற்றின் ஊடாக தனியார் மயமாக்கலின்றியே அரச நிறுவனங்களின் செயற்றிறனை அதிகரிக்க முடியும். இதற்கான சிறந்த முன்னுதாரணத்தை எமது பிராந்தியத்திலுள்ள பல்வேறு நாடுகளும் வழங்கியுள்ளன- என்றுள்ளது.(க)

# இ.போ.ச வைக் கட்டியெழுப்ப ஜனாதிபதியால் முன்மொழிவு

கொழும்பு, மே 22

இலங்கைப் போக்குவரத்து சபையை இலாபமீட்டும் முன்னணி நிறுவனமாக மாற்றுவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முன்மொழிவுகளை முன்வைத்துள்ளார். திறைசேரியிலிருந்து நிதி ஒதுக்கப்படுவதற்குப் பதிலாக திறைசேரிக்கு நிதியைப் பெற்றுக்கொடுக்கும் அரச நிறுவனமாக இலங்கைப் போக்குவரத்து சபையை மாற்ற முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கைப் போக்குவரத்து சபையின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. அதிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அவரது ஊடகப்பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:



வார நாள்களில் முற்பகல் மற்றும் பிற்பகல் வேளைகளில் அதிக வாகனநெரிசல் காணப்படுகிறது. அதைக் குறைப்பதற்காக தமது சொந்தக்கார்களில் அலுவலகங்களுக்கு வருவோரை பொதுப் போக்குவரத்து சேவையுடன் இணைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இதற்குத் தீர்வாக தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் கார்களை நிறுத்தி அலுவலகங்களுக்கு பஸ்களில் பயணம் செய்வதற்குத் தேவையான முறைமையொன்றை உடனடியாக அறிமுகப்படுத்துமாறு ஜனாதிபதி முன்மொழிந்தார். இதற்கு முழுமையான வசதிகளைக் கொண்ட பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். பாடசாலை மாணவர்களுக்காக பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்து பாடசாலை பஸ் சேவையை மேம்படுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். பாடசாலை பஸ்களை மஞ்சள் நிறத்துடன் வீதிகளில் முன்னுரிமை வழங்கப்படக்கூடிய வகையில் சேவையில் ஈடுபடுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டிகளையும் தனியார் பஸ் வண்டிகளையும் இரண்டு நிறங்களில் சேவையில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகாலத் திட்டத்திற்கு அமைய மொத்த நடடிவக்கைகளையும் முன்கொண்டு செல்வதற்கும் ஜனாதிபதியால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன - என்றுள்ளது. (ப)

# 5000 ரூபா நிதி உதவியை நிறுத்துமாறு கூறவில்லை

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, மே 22

அரசாங்கத்தின் 5 ஆயிரம் ரூபா நிதி உதவியை நிறுத்துமாறு தாம் ஒருபோதும் வேண்டுகோள் விடுக்கவில்லை என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எனினும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தொடர்பான குற்றச்சாட்டுகள் அரசியல் தன்மை கொண்டவையாகக் காணப்பட்டதால் குறிப்பிட்ட திட்டத்தை அரசியல் கட்சியோ வேட்பாளரோ தனது பரப்புரைக்குப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கவேண்டாம் என்றே அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, கொரோனா தொற்றால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை இடைநிறுத்துவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (ப)

# சம்பளக் குறைப்புக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு

கொழும்பு, மே 22

அரசாங்கம் பலவந்தமாக அரச ஊழியர்களின் சம்பளத்தில் குறைப்புச் செய்துள்ளது என்று கூறி இலங்கை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக இந்த முறைப்பாட்டை தாம் மின்னஞ்சல் மூலம் அனுப்பியுள்ளோம் என்று இலங்கை தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார். கொரோனா நிதியத்துக்கு எனத் தெரிவித்து அரச ஊழியர்களின் சம்பளத்தில் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது என்றும், இது தொடர்பில் தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்த போது அரச நிறுவனங்களின் தலைவர்கள் அமைதி காக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். தாபனச் சட்டம் மற்றும் நிதிச் சட்டங்களுக்கு அமைவாக அரச ஊழியர்களின் விருப்பமின்றி அவர்களது சம்பளத்தில் எவ்வித குறைப்பும் செய்யமுடியாது என்றும் மஹிந்த ஜயசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். (ப)

# கட்டை ஆலடி மயான சீரமைப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 22

கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்தின் சீரமைப்பு மற்றும் அழகுபடுத்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் மதுசுதன் தெரிவித்தார். இந்த வேலைத் திட்டங்கள் சுமார் 25 இலட்சம் ரூபா செலவில் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

5 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மயான ஒதுக்கீடு வேலைத்திட்டம் முன்மொழிவு களுக்காக சபை அமர்வில் கடந்த 20 ஆம் திகதி விடப்பட்டபோது, சபையால் முன்னர் வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட கட்டை ஆலடி மயானத்துக்கான நீர் வசதி என்பது இன்னும் கிடைக்காதது வருத்தமளிக்கிறது, அங்கு தகனக் கிரியைகளுக்குச் செல்பவர்கள் நீர் பெறச் சிரமப்படுகிறார்கள். அங்குள்ள கிணற்றைத் தூய்மைப்படுத்தி அத்தோடு புதிய நீர்த்தாங்கி அமைக்க ஒரு மில்லியன் ரூபாவையும், கிறிஸ்தவர்களுக்கான மயான சுற்றுமதில் மேலும் அழகுபடுத்தல் வேலைகளுக்கு 2 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 3 மில்லியன் ரூபா ஒதுக்க வேண்டும் எனக் கோரப்பட்டது.

பல உறுப்பினர்கள் ஏனைய மயானங்களுக்கும் வசதிகள் தேவை என கோரிக்கைவிடுத்துள்ள நிலையில், எந்த மயானங்களுக்கு என்ன வளங்கள் தேவை என ஆராய்ந்த பின் அடுத்த அமர்வில் நிதி ஒதுக்கீடு பற்றி தீர்மானிக்கப்படும் என தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (ப)

# குடும்பிமலை காட்டுக்குள் சட்டவிரோத மரக்கடத்தல்

## ஐவர் கைதாகிப் பிணை

மட்டக்களப்பு, மே 22

மட்டக்களப்பு, வாழைச்சேனை வட்டார வனத் திணைக்களத்துக்கு சொந்தமான குடும்பிமலைக் காட்டுப்பகுதியில் மரக்கூட்டுத்தாபன அனுமதிப்பத்திரத்தை பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்ட மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டது.

மரக்கடத்தலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில், ஐந்து சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இரண்டு வாகனங்கள், முதிரை, தேக்கு மரக் குற்றிகள் மற்றும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட வன அதிகாரி எஸ்.ஏ.பி.எம்.பெரோ, மாவட்ட உதவி வன அதிகாரி எம்.ஏ.ஏ.குரே ஆகியோரின் மேற்பார்வையில் கீழ் வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தலைமையிலான வன உத்தியோகத்தர்கள் நேற்று மேற்கொண்ட நடவடிக்கையின்போது இந்த மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. ஆறு அடி நீளம் மதிக்கத்தக்க 41 தேக்கு மரக் குற்றிகளும், ஏழு முதிரை மரக் குற்றிகளும், வகுப்பு ஒன்றைச் சேர்ந்த 40 தேக்கு மரக்கட்டைகளும், வகுப்பு இரண்டைச் சேர்ந்த 100 தேக்கு மரக்கட்டைகளும் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. கைதுசெய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்கள் அன்று வாழைச்சேனை மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். ஒரு இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் அவர்கள் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ப-150)

# புலி ஆதரவாளர்கள் அரசியலில் செல்வாக்கு

## பிவிதுறு ஹெல உறுமயவின் கண்டுபிடிப்பு

கொழும்பு,மே 22

விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் தற்கொலைக் குண்டுதாரி ஸஹ்ரான் குழு ஆகியோர் அழிக்கப்பட்டாலும், அவர்களின் ஆதரவாளர்கள் அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்றனர்.

இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய அமைப்பின் உப தலைவர் மதுமாதவ அரவிந்த தெரிவித்தார். கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப் புலிகள் அமைப்பினதும், தற்கொலைக் குண்டுதாரி ஸஹ்ரானினதும் நோக்கங்களை நிறைவேற்றும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசியலில் செல்வாக்கு செலுத்துகின்றனர். இனவாத வன்முறைகளை நாட்டில் இனியொரு போதும் தோற்றம்பெறாத அளவுக்கு தேசிய பாதுகாப்பு தற்போது பலப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் விவகாரத்திலும், எதிர்த்தரப்பினர் இனவாத முரண்பாட்டை தோற்றுவிக்க முயற்சித்தார்கள்-என்றார். (க)

# காற்றாலை மின்உற்பத்தியை துரிதப்படுத்த ஆலோசனை

மன்னாரில் அமைக்கப்பட்டு வரும் நாட்டின் பெரும் காற்றாலை மின்உற்பத்தி நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும் என்று திட்டத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. சுமார் 25 பில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் இந்தக் காற்றாலை மின்உற்பத்தி நடவடிக்கையை அடுத்த செப்ரெம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த திட்டத்தின் ஊடாக 103 மொஹா வோட் மின்சாரத்தை பெற்றுக்கொள்ளமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)



# 4 மாகாணங்களில் டெங்கு அபாயம்!

கொழும்பு, மே 22

மழையுடனான வானிலை நீடித்துவருவதால், மேல், தென், சப்பிரகமுவ, மத்திய ஆகிய நான்கு மாகாணங்களில் டெங்கு அபாயம் அதிகம் உள்ளது என்று டெங்குத் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் அருணஜயசேகர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வருடத்தின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் சுமார் 19 ஆயிரத்து 446 பேருக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. அவர்களில் 3 ஆயிரத்து 361 பேர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். தற்போது மழையுடனான காலநிலை நிலவுவதால் டெங்கு நுளம்புகள் பரவுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன.

நீர் தேங்கியுள்ள பகுதிகளில் நீரை அகற்றவும், கிருமி நாசினி வீசவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். டெங்கு நுளம்புகள் தொடர்பாக மக்களுக்கு ஆலோசனை வழங்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 40க்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் சிகிச்சைபெற்று வருகின்றனர் என்று மருத்துவமனையின் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது-என்றார். (க)



# ஹோமாகம விளையாட்டரங்கு திட்டம் நிறுத்தம்

கொழும்பு, மே 22

இலங்கையின் முன்னணி வீரர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலை அடுத்து ஹோமாகமவில் புதிதாக நிர்மாணிக்கப்படவிருந்த பிரமாண்டமான விளையாட்டரங்குக்கான திட்டத்தை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தலைமையில் அலரிமாளிகையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஹோமாகமவில் 60 ஆயிரம் ஆசனங்களைக் கொண்ட பிரமாண்டமான சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கு அமைக்கப்படவுள்ளது என்றும், அதற்கான முழுச் செலவையும் (3040 மில்லியன் டொலர்) ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் பொறுப்பேற்கும் எனவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத் தலைவர் ஷம்மி சில்வா தெரிவித்திருந்தார். மஹேல ஜயவர்தன, ரொஷான் மஹநாம, அர்ஜுன ரணதுங்க, நாமல் ராஜபக்ச, யோஷித்த ராஜபக்ச ஆகியோர் தற்போதைய நெருக்கடி நிலையில் இந்த மைதானம் தேவைதானா என்ற கேள்வியுடன் தங்களது விமர்சனங்களை வெளியிட்டிருந்தனர். இவ்வாறான சூழ்நிலையிலேயே பிரதமர் தலைமையில் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் இலங்கையின் முன்னாள் பிரபல வீரர்களான ரொஷான் மஹநாம, குமார் சங்கக்கார, சனத் ஜயசூரிய, மஹேல ஜயவர்தன, சமகால வீரர் லசித் மாலிங்க உட்பட இன்னும் பல வீரர்கள் கலந்துகொண்டு கருத்துக்களைப் பரிமாறினர். (க)

# பேனா, கோப்பையை பகிர்வதும் ஆபத்தே!

## சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவிப்பு

கொடிகாமம், மே 22

பேனாக்கள், தட்டுகள், கோப்பைகள் போன்றவற்றை பிறருடன் பகிர்ந்து கொள்ளவேண்டாம் என்று சுகாதார மேம்பாட்டு பணியகம் அறிவித்துள்ளது.

பணிபுரியும் இடத்தில் கொவிட்19 தொற்றை முறியடிப்பதற்கான புதிய வாழ்க்கை முறையைக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளையும் தவிர்க்கப்பட வேண்டிய வேலைகளையும் பற்றி பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கொவிட்19 தொற்று பரவுவதைத் தடுக்கும் முகமாக தயார்நிலையில் திட்டம் ஒன்றைத் தயார் செய்யுங்கள். இப்போதும் ஒரு மீற்றர் தூரத்தைப் பேணிக் கொள்ளுங்கள். அலுவலக தளபாடங்களின் மேற்பரப்புகள், அடிக்கடி தொடப்படும் மேற்பரப்புக்கள் போன்றவற்றை அடிக்கடி தொற்று நீக்கிகளைப் பாவித்துச் சுத்தப்படுத்துங்கள். கதவு போன்றவற்றைத் திறந்து மூடும்போது கைகளால் தொடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அறைகளில் ஜன்னல் கதவுகளை திறந்து வைத்துக்கொள்ளுங்கள்.

வீட்டில் இருந்தபடியே அலுவலக வேலைகளைச் செய்வதற்கு ஊக்கப்படுத்துங்கள். அலுவலகங்களில் அல்லது பணிபுரியும் இடங்களில் வழக்கமாகப் பணிபுரிவோரில் மூன்றில் ஒன்று அல்லது 50 வீதம் மட்டும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வேலையில் ஈடுபடுமாறு ஆயத்தப்படுத்துங்கள். ஒருவரையொருவர் தழுவிக் கொள்வதையோ கை குலுக்குவதையோ தவிர்த்துக்கொள்ளுங்கள்.

பேனாக்கள், தட்டுகள் கோப்பைகள் போன்றவற்றைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டாம். உங்களுக்கு தடிமன், இருமல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் நீங்கள் பணிபுரியும் இடத்துக்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்-என்றுள்ளது. (ப-159)

# கலந்துரையாடல்

முல்லைத்தீவு, மே 22

முல்லைத்தீவு வன்னிவிலாங்குளம் அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் ஆலய மண்டபத்தில் அண்மையில் மாவட்டச் செயலர் தலைமையில் நடைபெற்றது.

மாங்குளம் வன்னிவிலாங்குளம் அம்மன் ஆலய பொங்கல் உற்சவம் எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பாதுகாப்புக் கருதி பொதுமக்களை மட்டுப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் ஆலயத்தில் சடங்குகள் செய்வதற்கு 50 பேர் சுகாதார நடைமுறைக்கு அமைவாக அனுமதிக்கப்பட்டதோடு, நேர்த்திக் கடன் செய்வது முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் ஆலயத் தலைவர் பொ. பிருந்தாபன், மாந்தை கிழக்கு சுகாதார பணிப்பாளர் க.சுசீந்திரா, பொலிஸ் பொறுப்பதிகாரி, இராணுவ பொறுப்பதிகாரி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர், மாந்தை கிழக்கு பிரதேச செயலர், உதவி மாவட்ட செயலர் ஆலய நிர்வாக உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 22.05.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.